**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. S.கணேஷ், எம்.காம்., எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் புதன்கிழமை**
**I.A.05/2024 in O.S.58/2019**

கலியமூர்த்தி ... மனுதாரர்/ வாதி

//எதிர்//

கோபால் .. எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இறுதியாக 19.08.2024 அன்று விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.P.மனோகரன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய போதிய கால அவகாசம் வழங்கப்பட்டும் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களுக்காக, வழக்கில் தாக்கல் செய்துள்ள 11.03.1989 அன்று ஏற்பட்ட பதிவு செய்யப்பட்டாத முச்சலிகை ஆவணம் புகைப்பட நகலை Secondary Evidence ஆக ஏற்று, மனுதாரர் தரப்பில் குறியிட அனுமதித்து உத்தரவாக வேண்டி சி.பி.சி.ஆர்டர் 17 ரூல் 4 மற்றும் பிரிவு 151–ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுதாரரின் பிரமான வாக்குமூலத்தின் சுருக்கம்:–**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர் பேரில் தாவா தொடர்ந்து தற்போது வழக்கில் விசாரணைக்கு வந்துள்ள நிலையில் தாவா சொத்தினைப் பொருத்து கடந்த 11.03.1989 ல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரர் கோபால் என்பவருக்கும் இடையே ஒரு பதிவு செய்யப்படாத முச்சலிகை பத்திரம் ஏற்பட்டு, அதன் அசல் கைதவறுதலாக எங்கேயோ காணாமல் போனதால் அதன் புகைப்பட நகல் மனுதாரரார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி முச்சலிகை ஆவணத்தை பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், மேற்படி முச்சலிகை பத்திரம் தாவாவிற்கு மிகவும் அவசியமான சாட்சியம் என்றும், ஆதலால் பதிவு செய்யப்படாத முச்சலிகை ஆவணத்தின் புகைப்படி நகலை Collateral Purpose க்காக

Secondary Evidence –ஆக ஏற்று, மனுதாரர் தரப்பில் குறியிட அனுமதிக்க உத்தரவாக வேண்டும் என்று குறிப்பிட்டு மனுதாரர் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.** எதிர்மனுதாரருக்கு போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட்டும், எதிருரையை தாக்கல் செய்யாததால் இவ்வழக்கில் தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

3. மனுதாரர் தரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>5. பிரச்சனைக்குரிய தீர்வு</u>**

மனுதாரர் தரப்பு வாதத்தில் தாவா சொத்தினைப் பொருத்து கடந்த 11.03.1989 ல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரர் கோபால் என்பவருக்கும் இடையே ஒரு பதிவு செய்யப்படாத முச்சலிகை பத்திரம் ஏற்பட்டு, அதன் அசல் கைதவறுதலாக எங்கேயோ காணாமல் போனதால் அதன் புகைப்பட நகல் மனுதாரரார் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி முச்சலிகை ஆவணத்தை பதிவு செய்ய வேண்டிய அவசியமில்லை என்றும், மேற்படி முச்சலிகை பத்திரம் தாவாவிற்கு மிகவும் அவசியமான சாட்சியம் என்றும், ஆதலால் பதிவு செய்யப்படாத முச்சலிகை ஆவணத்தின் புகைப்பட நகலை Collateral Purpose க்காக Secondary Evidence –ஆக ஏற்று, மனுதாரர் தரப்பில் குறியிட அனுமதிக்க உத்தரவாக வேண்டும் என்று குறிப்பிட்டு வாதத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

6. மேற்படி மனுதாரரர் தரப்பு வாதத்தினையும், மனுவினை பரிசீலனை செய்து பார்க்கையில் தாவா சொத்தினைப் பொருத்து கடந்த 11.03.1989 ல் மனுதாரருக்கும், எதிர்மனுதாரர் கோபால் என்பவருக்கும் இடையே ஒரு பதிவு செய்யப்படாத முச்சலிகை பத்திரம் ஏற்பட்டதாக மனுதாரர் மனுவில் கூறியுள்ளபோதிலும், மேற்படி ஆவணம் எது சம்மந்தமாக ஏற்பட்டது என்பதையும், அந்த ஆவணம் வழக்கிற்கு எதற்காக தேவைப்படுகிறது என்பதற்கான எந்த ஒரு விளக்கத்தையும் மனுதாரர் மனுவில் தெளிவாக குறிப்பிடவில்லை.

7. மேலும், ஆவணத்தை பார்க்கையில் அது தெளிவற்றதாகவும், அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை. அவ்வாறு உள்ளபோது அது எவ்வாறு வழக்கிற்கு உதவக்கூடியதாக இருக்கும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும்

மேற்படி ஆவணத்தின் அசல் கைதவறுதலாக எங்கேயோ காணாமல் போனதால் அதன் புகைப்பட நகலை மனுவுடன் தாக்கல் செய்வதாக கூறியுள்ளார். மேற்படி அதனை பார்க்கையில் மேற்படி ஆவணம் உண்மையில் வழக்கிற்கு முக்கியமான ஆவணமாக இருந்திருந்தால், ஆவணம் காணாமல் போன உடனே அதன் விவரம் குறித்து காவல் நிலையத்தில் மனுதாரர் புகார் கொடுத்திருப்பார். ஆனால் மனுதாரர் மேற்படி ஆவணம் காணாமல் போனது சம்மந்தமாக எந்தவொரும் புகாரும் காவல் நிலையத்தில் கொடுத்ததாக மனுவில் குறிப்பிடவில்லை.

8. மேலும், மனுதாரரின் வழக்கானது ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு உள்ளபோது மேற்படி ஆவணம் வழக்கிற்கு எவ்வகையில் முக்கியமானது என்பதை மனுதாரர் மனுவில் தெளிவாக கூறாததால் மனுதாரரின் மனு அனுமதிக்க உகந்ததல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. எனவே, முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2024 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

S GANESH
Digitally signed by S GANESH
Date: 2024.09.04 17:05:32 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.

S GANESH
Digitally signed by S GANESH
Date: 2024.09.04 17:05:38 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.